[24th July 1962

கனம் திரு. வெ. ராமைய்யா : ஸ்பேர் பார்ட்ஸ் எவ்வளவு அதிகமாக வாங்க முடியுமோ அதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. சில ஸ்பேர் பார்ட்ஸ் வெளி தேசத்திலிருந்து வரவேண்டி இருப்பதால், 'ஃபாரின் எக்ஸ்சேஞ்சு' கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. அதனுல் சிறிது கால தாமதமாகலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலில் நீலகிரி ஜில்லாவுக்கு 12 ரோடு ரோலர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைக்கு அந்த ரோலர்கள் தேவைப் படும் காரணத்தால் கிராமப் புறங்களில் இருக்கும் ரோடுகளுக்கெல்லாம் அந்த ரோலர்கள் கிடைப்பதில்லே. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு ரோடு ரோலர் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமையா : அதிகமாக ரோலர்கள் வேண்டுமென்றுல் சம்பந்தப்பட்ட இலாகாகள் அதற்குவேண்டிய முயற்சிகளே எடுத்துக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் வேலேகள் நடக்க வேண்டிய அவசியம் குறித்துத்தான் 12 ரோலர்கள் நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரை கொடுக்கப்பட்டிருக்கின்றன. பற்றுக்குறை இருக்கும் பட்சத்தில் தனியாகக் கவனம் செலுத்தப்படும்.

சினிமா கொட்டகைகள் (கார் நிற்க வசதி)

* 570 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நிதியமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மோட்டார்கார்கள் நிறுத்தி வைக்க இடவசதி செய்ய வேண்டுமென சென்னேயிலுள்ள சினிமாக் கொட்டகைக்காரர்களுக்கு அரசாங்கம் உத்திரவிட்டதா?

(இ) இந்த உத்தரவு இதர மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க உத்தேச முண்டா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) No, Sir.

திருவாடுதுறை ஆதீனப் பண்ணை நிலங்கள்

* 571 கேள்வி.—**திரு. கோ. சி. மணி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவாடுதுறை ஆதீனம் தங்களிடம் வைத்திருந்த பண்ணை சாகுபடி நிலங்களே விவசாயி அல்லாதாருக்கும் தங்களுக்கு வேண்டியவர் களுக்கும், பிணுமி, குத்தகைச் சீட்டுக்கள் எழுதிக்கொடுப்பது அரசாங்கத் திற்கு தெரியுமா?

(இ) அப்படியானுல், அது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) No Sir,

(இ) Does not arise.

Beedi Workers (minimum wages)

* 572 *Q.*—**Sri M. KALYANASUNDARAM** (on behalf of **Sri K. A. MATHIALAGAN**) Will the Hon. the Minister for Finance be pleased to state the safeguards guaranteed to the beedi workers to get their minimum wages from those who evade the mandatory provisions of the various labour laws?